Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

(1889)

ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ புரட்டாதி௴ சூ உ வெள்ளிக்கிழமை (21 SEPT 1956) [இல-உக

### ஆராய்ச்சித் துறைத் தலைவர்

தமிழ்மறைக் கழகத் தலைவரும் கொழும்பு அரசினர் ஆசிரியகலாசாலை விரிவுரையாளருமாகிய செந்தமிழ்க் கலைமணி கா. பொ. இரத்தினம் அவர்கள் அரசாங்க கருமமொழி அலுவலகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுளர். 1-10-56 ல் அவர் தம் புது உத்தியோகத்தை ஏற்பார்.

### உசன் சைவ வித்தியாசாலை மாணவிக்குத் தங்கப் பதக்கம்

உசன் சைவ வித்தியாசாலை மாணவி செல்வி கனகம்மா கனகசபை கடந்த (டிசம்பர்) மார்கழி மீ நடைபெற்ற சிரேஷ்டபாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் முதற்பிரிவிற் சித்தியடைந்தார்.

அவர் இந்துசமய பாடத்தில் (சைவசித்தாந்தம்) இலங்கை முழுவதிலும் முதற்றரமாகத் திறமை காட்டியதால் அவருக்கு தங்கப் பதக்கம் ஒன்று பரிசளிப்பதற்கு வித்தியா பகுதியார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோலாலம்பூர்க்

# குமரக்கடவுள் கோவில்

—0—0—

## சிலாங்கூர் இலங்கைச் சைவசங்கத்தின் சிறந்த பணி

**[சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டுக் கூட்டத்திற் செயலாளர் திரு. ஆ. செவ்வந்திநாதன் வெளியிட்ட அறிக்கை இச் சங்கத்தின் பெருவளர்ச்சியையும் கோயிற் றெண்டின் சிறப்பையும் மலாய்நாட்டுச் சைவர்களின் சமயாபிமானத்தையும் நன்கு காட்டுகின்றது.]**

கோயிற் பரிபாலனம்:

அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற சந்தா மாதமொன்றிற்குச் சராசரி 389-00 அங்கத்தவர்கள் இதுகாறும் சந்தாவைத் தவறாது கொடுத்துதவிய வண்ணம் மேலும் அப்படிச் செய்வதுடன், புது அங்கத்தவர்களையும் தம்மாலியன்றவரை சேர்க்கும்படி வேண்டப்படுகின்றனர்.

தினபூசை:

தினமும் மூன்றுகாலப் பூசை கிரமாய் நடைபெற்று வருகிறது. முன் அறிக்கையில் குறிப்பிட்டபடி அன்பர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ஒரு வெள்ளி வீதம் சேர்க்கப்பட்டு தின பூசை அன்பர்கள் செலவில் நடைபெறுகின்றது. இவர்களில் அங்கத்தவர் பலரும் ஏனையோர் சிலருமே; இவ்வாறு கொடுத்துதவும் அன்பர்களின் தொகை 120-00 இவ்வீகையை இடைவிடாது தொடரும்படி வேண்டுகின்றோம்,

பூந்தோட்டம்:

கந்தகோட்டத்துக்கு முக்கிய அம்சங்களிலொன்றாக விளங்குவது நந்தவனமே அங்கேதான் முருகன் அழகு வடிவாக நின்று காட்சியளிக்கின்றான். இந்தப் பூந்தோட்டத்தில் கார்த்திகேயன் சரவணப் பொய்கையில் தோன்றும் திருக்கோலத்தை நினைவூட்டும் செங்கழுநீர்த் தடாகம மத்தியிலும், இருமருங்கிலே தாமரைத் தடாகங்களும், நான்கு திசைகளில் முனிபுங்கவர்களும சுற்றிவர மலர் வனங்களும், பின்னணியில் நதியும் குன்றும் நல்ல காட்சியை எந்நேரமும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

கோயிற்பின்புறமாக ஓடும் நதியின் ஓங்கார வடிவு கொண்ட வளைவும், நீரோட்டத்தின் 'சலசல'ப்பும் பிரணவ ஒலியாகத் தொனிக்கின்றது. குன்றின் மேலே நாட்டப்பட்டிருக்கும் வான நிலையக் கம்பமும் அதன் நுனியில் பிரகாசிக்கும் இரத்தினம்போன்ற ஒளியும் முருகனுடைய திருக்கை வேலே ஆகாயமளாவி நின்று அபயம்கொடுத்திருப்பான் போன்ற காட்சியைக் கொடுத்து நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. இக் கோயில் மூர்த்தி தலம் தீர்த்தம் அமையப் பெற்றுள்ளது,

தெற்கு வீதியில் இன்னொரு பூந்தோட்டமும், அதனுள்ளே அப்பருடைய உருவச் சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது அடிகளின் தோளில் அமைந்த உழவாரப "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதன் பொருளையும் தொண்டின் உயர்வையும் பார்ப்பவர்கள் தரிசிப்பவர்களெவர்க்கும் மனதைக் கவர்ந்து உணர்த்திக்கொண்டிருக்கிறது. நந்தவனத் தொண்டி லீடுபட்ட அன்பரின் ஆக்கமே இது.

இந் நந்தவனம் ஆண்டுக்காண்டு மிக வளப்புடன் வளம்பெற்று வளர்கின்றது. ஒரு பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த கழிநீர்வாய்க்காலைத் தூர்த்து, அதனை வேறு வழியாக விட்டதன் பயனாக நந்தவனம் விசாலம்டைந்திருப்பதுமன்றி நல்ல பார்வையைக் கொடுக்கின்றது. கோயிற் சிப்பந்திகள் வீட்டிற்கும் தோட்டத்திற்கும் நடுவேயுள்ள முள்வேலி அகற்றப்பட்டு அதற்குப் பதிலாகக் கற்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மற்றொரு பக்கம இரும்புப் பிணைச்சல் கம்பியால் வேலி போடப்பட்டுளது. இத் திருத்தொண்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### இலங்கையில் பிரித்தானிய தளங்கள்

இலங்கையிலுள்ள பிரித்தானிய தளங்கள் இலங்கையின் பொறுப்புக்கு வருவதற்கு முன் யுத்தமேற்படுமானால் அவற்றின் நிலைமை என்னவாகுமென்று முதல் மந்திரி ஸ்ரீ பண்டார நாயக பிரித்தானிய அரசாங்கத்தைக் கேட்டபொழுது அவை எவ்விதமாயும் உபயோகிக்கப்படமாட்டா என்று பிரித்தானிய அரசாங்கம் வாக்குறுதிகொடுத்திருக்கின்றதாம்.

# கடவுட் பிரார்த்தனை

## செய்யும் முறையும் பெறும் பயனும்

கடவுளிலும் கடவுளின் திருவருள் ஆணையிலும் நம்பிக்கையுடையவர்களுக்கு கடவுட் பிரார்த்தனையானது ஆழ்ந்த கருத்தையும் பெரும் பயனையும் தருவதாயிருக்கிறது. கடவுட் பிரார்த்தனையை எல்லாச் சமயங்களும் அவ்வச் சமயக் கொள்கைகளுக்கு ஏற்ற முறையில் ஒவ்வொருவரும் செய்யவேண்டுமென்று வகுத்திருப்பதோடு அதை ஒழுங்காய்ச் செய்யவேண்டிய இன்றியமையாமையையும் முக்கியமாக வலியுறுத்தியிருக்கின்றன. கடவுளிலும் கடவுளின் திருவருள் ஆணையிலும் ஒருவர் நம்பிக்கையுடையவராயிருந்தால் உலக அமைப்பில் தாம் ஒரு கருவிப் பொருளே என்றும், அக் கருவியாலாக வேண்டிய உபயோகத்துக்கு ஏற்றவாறு தாம் அமைய வேண்டும் என்றும் சொல்லாமலே விளங்கும். ஆகையினாலே, தாம் கடவுளின் திருக்கரத்தில் தகுந்த கருவியாயமையவேண்டுமானால் ஒருவர் தம்மைச் சிறந்த முறையில் வைத்துக் கொள்ளவேண்டும்.

எங்கள் ஒவ்வொருவரிலும் நன்மையும் தீமையுமிருக்கின்றது. நாங்கள் சிறந்தவர்களாயிருக்க வேண்டுமானால் எங்களிலுள்ள தீயதை நீக்கி நல்லதை எப்பொழுதும் வளர்த்து வரவேண்டும். இம் முயற்சி சித்தியடைதற்கு நாம் எம்மைக் கடவுளிடம் முழுதாய் ஒப்படைத்துத் தீயது எதையும் செய்யாதிருத்தல் வேண்டும்.

கடவுளிடம் எம்மை ஒப்படைத்தற்கு நாம் செய்ய வேண்டியது நாம் எதுசெய்யும் பொழுதும் அவரை எப்பொழுதும தியானித்தலேயாகும். இது ஒன்றே அதற்குத் தகுந்த வழியாயுள்ளது. அத்துடன் உண்மைக்கு எதிரானது எதையும் செய்யாது விடுதலுமாகும். ஆகையினாலே ஒருவர் தம்மைக் கடவுளிடம் முழுதாய் ஒப்படைக்க விரும்பினால் அவர் இடைவிடாது கடவுளைத் தியானித்துப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

அரசியல் அலை

# 'கொழும்பு' துறைமுகம் குழப்பத்துக்கு உறைவிடமா............?

## உணவு மந்திரியார் 'மத்தளம்' போல உபத்திரவப்படுகின்றார்!

மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி கொண்டு வந்த தோல்விகள் பல. அவற்றுட் கொழும்புத்துறைமுகச் சீர்கேடு முக்கியமானது பொதுசனத்துக்கு உதவி புரிய வந்திருக்கின்றேம் என்று வாய்ப்பறையறையும் பண்டாரநாயக அரசாங்கம் புறநாடுகளிலிருந்து வரும் உணவுப் பொருட்களை உரிய காலத்தில் இறக்குமதி செய்ய முடியாது அவலப்படுவதன் அறிகுறியென்ன......? **இந்த ஆட்சி பலமற்றதாய் — பயனற்றதாய் இருக்கின்றதென்பதே!**

எத்தனையோ மாதங்களாகக் கொழும்புத் துறைமுகத்திலே வேலைநிறுத்தம் என்ற நாடகம் நடைபெற்று வருகிறது. தொழிலாளர்களின் கட்சி ஆதிக்கம் என்ற அளவில நாடகமானாலும் அது மக்களுக்கு விக்கினமாக விளைகின்றதென்பதை இடதுசாரித் தலைவர்கள் எண்ணுகின்றாரில்லை.

உணவு மந்திரியாரின் நிலைமையோ அமைச்சவையில் ஒன்று. துறைமுகத் தொழிலாளர் சங்கத்தில் இன்னொன்று முன்னையதிலிருந்து அதிகாரச்சட்டம் பிறப்பிக்க உதவியாயிருக்கின்றார். பின்னையதிலே அச்சட்டத்துக்கு விரோதமாக ஆயத்தஞ் செய்கின்றார். இரண்டு தோணிகளிற் கால் வைத்திருக்கும் இந்நிலை ஈற்றில் இன்னல் விளைவித்து இந்த இடதுசாரி மந்திரியாரையும் அந்தவெளிமடைப் பிரதிநிதி திரு இராசரத்தின போன்று வெளியேறச் செய்துவிடும் என்றே பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

பிரதமருக்கு உதவிபுரிய வந்த பிரதம சீடரான திரு. பிலிப்புக் குணவர்த்தன திரு. பண்டாரநாயகவுக்கு மட்டுமன்று பொதுசனத்துக்கும் தலைவலியைக் கொடுக்கின்றார். முதலமைச்சருயோ மூச்சுப் பேச்சில்லாமல் எப்படியாவது இந்த முரண்டுத்தனமானவர்களை இயற்கைச் சம்பவங்கள் வெளியேற்றி வைக்கட்டும் என்ற கொள்கையில் நிற்கின்றார். இதற்கிடையில் நாடு வாடி வதங்குகின்றது.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
ாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
ழ்க தண்புனல் வேந்தனுமோங்க
ழ்க தீயதெல்லாம் அரனாமமே
ழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஹூ ஆவணி மீ சூ உ வெள்ளிக்கிழமை


## கூட்டுறவுக் கொள்கை தரும் குணநலன்

உலக முன்னேற்றத்துக்கு உதவியாயிருப்பது கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியேயென்று கூறப்படுகின்றது. இந்த இயக்கம் இலங்கையிலும் குறிப்பாக வடபகுதியிலும் நற்பயனை அளித்து வருகிறதென்று அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகின்றது. உண்மையிலே கூட்டுறவு உணர்ச்சி மக்கள் உள்ளத்திற் குடிகொண்டுவிட்டதா என்றும் அவ்வாறாயின் குணநலனும் அதற்குத்தகச் சிறந்திருக்கின்றதா என்றும் ஆராய்வது நன்று. யாழ்ப்பாணத்திலே சென்றவாரம் நடந்த கூட்டுறவு மகாநாட்டில் இரண்டாம்நாள் தலைமை தாங்கிய நீதிபதி திரு ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் இந்த இயக்கத்தின் வளர்ச்சியைப்பற்றிப் பாராட்டிப் பேசியபின் குணநெறிக்கும் இது வித்தாகவேண்டும் என்று விரும்பினர். இந்த எண்ணம் கூட்டுறவு இயக்கத்தை நடத்தும் சமூக சேவையாளர்களிடத்தில் உண்டாகுமேயானல் இந்நாட்டில் எவ்வளவு கூட்டுறவுப் பெருமை படைத்திருக்கின்றதோ அவ்வளவுக்கு குற்றங்களின்றி வறுமைப் பிணியின்றி நோயின் தாக்கமற்று வளம் மிக்கதாய் மக்கள் வாழவு நிலவும் என்பதற்கையம் இருக்கமாட்டாது.

**தண்ணீர் நிலநலத்தால்,** தக்கோர் குணங்கொடையால் என்ற முதுமொழிக்கிணங்கக் குண நலனுக்குக் கொடை அடிப்படையாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகும் தன்மையே கொடை என்னும் பெருங் குணத்தைக் கொண்டு வரும். கூட்டுறவு இயக்கத்திலே பிறர்க்கும் தமக்கும் உரியவராய் இருப்பதற்கு இடமுண்டாகையால் இந்த இயக்கத்தை எல்லாரும் ஆதரிக்க வேண்டியவர்களாவார்கள்.

குற்றங்களுக்குக் காரணமாயிருப்பது சுயநலம் என்பதைக் கூட்டுறவு இயக்கம் நன்கு எடுத்துக் காட்டுதல் வேண்டும். மக்கள் முன்னேற்றத்துக்கு அறிகுறி பொருளாதார விருத்தி மட்டுமன்று குணநலமும் ஆகும். நன்னெறியில் ஒழுகுகின்றவர்கள் வாழும் நாடு நன்மதிப்பைப்பெறும்.

# தெல்லிப்பளை ஐக்கிய வைத்தியசாலைத் திறப்பு விழா

———0———

## வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில்

——:o:——

**வலிகாமம் வடக்கு மக்கள் சார்பாகச் சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பெற்ற தெல்லிப்பளை ஐக்கிய வைத்தியசாலை சொந்தமான கட்டிடத்தில் அமைக்கப்பெற்றபொழுது வைத்தியகலாநிதி S. சுப்பிரமணியம் அவர்கள் அந்த நிலையத்தைத் திறந்து வைத்து ஆசீர்வதித்தனர்.**

பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு. ம. செல்லத்துரை J P. அவர்கள் வைத்தியசாலையின் வளர்ச்சி வரலாற்றை எடுத்துக் கூறிக் கட்டிடத்துக்காக எழுபது பரப்புக் காணியை நன்கொடை செய்த காலஞ்சென்ற திரு. தம்பு கனகரத்தினம் அவர்களின் பெருந் தன்மையைப் பாராட்டி வைத்தியசாலையை நடப்பிப்பதற்காக மனமுவந்து இசைந்துள்ள வைத்திய கலாநிதி S. இராமநாதன் M. P, C. P; M. R. C. S. அவர்களுக்கு நன்றிகூறி வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் அவர்களை அந் நிலையத்தைத் திறந்து வைக்குமாறு வேண்டினர். கூட்டுறவுப் பகுதித் தலைவர் திரு. யத்தவரா இந்த இயக்கத்தை மெச்சி அரசினர் உதவி நன்கொடைக்கு வேண்டியனவற்றைச் செய்வதாகக் கூறினர்.

மேற்சபை அங்கத்தவர் பொ. நாகலிங்கம், பாராளுமன்ற அங்கத்தவர் திரு. கு. வன்னியசிங்கம் வழக்கறிஞர் திரு நம. சிவப்பிரகாசம் ஆகியோர் சொற்பெருக்கினர்.

சங்கக் காரியதரிசி திரு. த. க. இராசசேகரம் அவர்கள் வைத்தியசாலை வரலாற்றையும் உபகாரிகளின் உதவியையும் எடுத்துக் காட்டினர்.

வழக்கறிஞர் திரு. சு. நடராசா நன்றியுரை கூறினர்.

கட்டிட வேலைக்காக ஒரு இலட்ச நிதி ஒன்றை வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ரூபா ஆயிரம் நன்கொடை அளித்து ஆரம்பித்து வைத்தனர் அன்பர்களும் ஆதரவாளர்களும் இயன்ற நன்கொடை செய்ய முன்வந்தனர்.

இந்த வைத்தியசாலை கூட்டுறவு இயக்கத்தின் ஆதரவில் அமைந்துள்ளது. காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பெருந்தெருவில் எட்டாங் கட்டைக்கு அணித்தாகத் துர்க்கை அம்மன் கோவிலுக்கப்பால் உள்ள பரந்த நிலத்தில் நிறுவப்பெற்றிருக்கின்றது.

### சிங்களம் அறியாத உத்தியோகத்தர்

——

சிங்கள மொழி அறிவில்லாத உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் தொடர்ந்திருக்கலாமென்றும் அவர்கள் சிங்களத்தைப் படிப்பதற்கு வசதி கொடுக்கப்படவேண்டுமென்றும் முதல் மந்திரி தீர்மானித்துள்ளாராம்.

## திருமணம்

———

வட்டுக்கோட்டை கிழக்கு திரு. ஆர் கந்தசுவாமி அவர்களின் புத்திரன் பகிரங்க வேலைப்பகுதி எந்திரக் கலை நிபுணர் திரு. பூலோகசுந்தரம் அவர்களுக்கும் வண்ணார்பண்ணை வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கம் அவர்களின் புத்திரி செல்வி சிறிரஞ்சனி அம்மாளுக்கும் ஆவணி மாதம் 30ந் திகதி (14-9-56) வெள்ளிக்கிழமை இரவு 11-30 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் சைவமுறைப்படி சிறப்பாக நடைபெற்றது. சுற்றமித்திரர் பலர் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்தனர். இறைவன் திருவருளால் எல்லா நலன்களையும் மணமக்கள் இனிதுபெற்று, இன்புற்று வாழ்வார்களாக

# வாழ்க்கை வாசலில்

— வஸந்த

### இலங்கை அமைச்சர்களின் அமைவு இலககணம்

அரசாங்க உத்தியோகத்தர்களை அமைச்சர்களாவது ஆட்சிக்கட்சி அங்கத்தவர்களாவது பொதுமேடைகளிலிருந்து கண்டனஞ் செய்வது விரும்பத்தகாததென்று பிரதமர் கூறியிருப்பது வேடிக்கைக் கூற்று அல்லது தமது இயலாத் தன்மையினுல் எழுந்த கூற்று என்ற கேள்வியை எழும்புகின்றது. நாளுக்கு நாள் நாழிகைக்கு நாழிகை அரசாங்க உத்தியோகத்தர்களைப்பற்றி மட்டுமன்றி ஆளுங்கட்சிக் கொள்கைகளைப்பற்றியுமே பிரதமரின் கட்சியிலுள்ளவர்கள் காரசாரமாகப் பேசுவது வழக்கமாயிருக்கின்றதை நோக்குமிடத்துப் பண்டாரநாயக ஆட்சியில் அமைச்சர்கள் அமையாத பேர்வழிகளாயிருக்கின்றார்கள் என்றே சொல்லவேண்டியிருக்கின்றது. கல்வி மந்திரியாருக்கு வாய்விலங்கு இடுவது முடியாத காரியமென்பது யாவரும் அறிந்ததே. தபாற்பகுதி மந்திரியார் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவிகளையே இல்லாதொழிக்க வேண்டும் என்று வெகுண்டெழுந்து பின் வெட்கித் தலை குனிந்துவிட்டார்.

இனி அந்த உணவு மந்திரியார்பேச்சுக்கண்டனஞ் செய்யாவிட்டாலும் செய்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 23—9—56 —— 29—9—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

போட்டியிடுவோரை வெல்லுதல் இந்த வாரம நிச்சயம். புகழுக்கும் சமூக சித்திக்கு மிடமுண்டு. உம்முடைய பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும். ஆனல் இனத்தவர்கள் உமக்குச் சிறிது தொந்தரவு செய்யக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச் சிக்கல்கள் இன்னமும் நீக்கப்படாமல் தொடர்ந்து நிலைக்கும். நீர் சித்தியடைதற்கு மிக முயன்றுழைக்க வேண்டும் நண்பர் அதிக உதவியாயிருப்பர். பணத்துறையில் சிறிது இருத்தம் காண்பீர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

சில சொந்தச்சிக்கல்கள் நீக்கப்படும். இடைஞ்சல்களிலிருந்து நீங்குவது உமக்கு இலகுவாயிருக்கும் எதிர்ப்பு அகன்றுவிடும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

வேலை வழக்கத்திலும் பார்க்க இந்த வாரம் கூடுதலாயிருக்கும். உம்முடைய கருமங்கள் பலவற்றில் நீர் சில கண்டனங்களையும் எதிர்ப்பையும் முன்னிடவேண்டிவரும். ஆனல் கடைசியில் நீர் வெல்லுவது நிச்சயம். வார இறுதியில் தனலாபம் நிச்சயம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

உமக்கு மிக அருமையான நெருங்கிய சிலருடன் நீர் இந்த வாரம் கோபிக்கக்கூடும். வாகனங்கள் உமக்கு அதிக செலவையுண்டாக்கும். அபாயங்கள் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல் இரு நாட்களும் உம்மைச் சிறிது நிலைகுலைக்ககூடும். பணத்துறையில் நல்ல வாரம். புகழும் பகைவரழிவும் நிச்சயம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உம்முடைய நண்பரைப் பிழையாய் நினைப்பதில் இந்த வாரம் நீர் விரைவீர். தேக சுகம் பாதிக்கப்படக்கூடும். இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. ஆனல் ஆபத்தான தொந்தரவுகள் வரமாட்டா. திங்கள் பிற்பகலும் செவ்வாய் புதனும் கவனமாய்க் கழிக்க வேண்டும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

முதல் அரை வாரம் புது முயற்சிகளுக்கு நல்லதாயிருக்கும் புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும், வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,

கடைசி நாள்தவிர இந்தவாரம் மிக நல்லாயிருக்கும், தன லாபமும் உம்முடைய திட்டங்களை நிறைவேற்றுதலும் நிச்சயம் உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புதுப் பொறுப்புகளை இந்த வாரம் நீர் ஏற்கவேண்டி வரும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டி வரும் வழக்குகள் அதிகம் சித்தியாகமாட்டா.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணத்துறையில் நல்ல வாரம். உமக்குக் கூடுதலான நன்மதிப்புக் கிடைக்கும். புது முயற்சிகள் மிக நல்ல பலனைத்தரும். சமூக சித்தியும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

உம்முடைய சொந்தக் கருமங்களில் சில திருத்தங்கள் நிச்சயம். நண்பர் அதிக உதவியாயிருப்பர். பண நெருக்கடிகளும் குறையவேண்டும். பகைவர் அழிவு நிச்சயம்.

# உண்மைக் காதல்

## உயர்ந்த வாழ்க்கை நெறி

### உருவாக்க வேண்டுகோள்

காதலென்பது தியாகத்தையடிப்படையாகக் கொண்டதாகும். காதலன் காதலிக்காகவும் காதலி காதலனுக்காகவும் ஆத்மீகப் பிணைப்புப் பூண்டு வாழ்வதே உண்மைக் காதல் வாழ்க்கை. வெளிப்புற ஏதுக்கள் கொண்டு இளைஞர்கள் காதலிலீடுபடுவது இன்றைய சமூகத்தில் எங்குஞ் சகசமாகக் காணக் கிடக்கின்றது. இத்தகைய காதல் உண்மைக் காதலல்ல. இவ்வகைக் காதலை இளைஞர்கள் மேற்கொள்வது பெரும்பாலும் தவறு. வெளிப்புற ஏதுக்கள் குறைந்தவுடன் காதலுங் கெடும். வெளிப்புற ஏதுக்கள் கெட்டாலும் கெடாமல் நிற்கின்ற உள்ளன்பே உண்மைக் காதல். உண்மைக்காதலை ஒருவராலும் தடைபண்ணவோ அழித்தொழிக்கவோ முடியாது காதலென்பது காந்த சக்தி வாய்ந்தது. இரும்புங் காந்தமும் பொருந்துந் தன்மை போல ஆண் பெண் இருபாலாரின் சிந்தையும் இயல்பாயுருகி ஒன்றுந்தன்மை எய்த வேண்டும்.

அன்பும், அறிவும், பண்பும் சேர்ந்து உருவெடுத்ததே காதலின் முழுமை; மெய்க்காதல். அப்படியான காதலிற்கு ஒருபோதும் இழுக்குநேரமுடியாது. நேரினும் அசைகக முடியாது. ஒருதலைக் காமத்தைப் பெரும்பாலும் ஆடவர் பெண்டிர் கைக்கொள்ளுவதனாற்றான் சண்டை சச்சரவுகளும் பழிபாவங்களும், மக்களிடையே பரவுவதற்கு இடமேற்படுகின்றது. அன்புடைக் காமமாக இருப்பின் கலவரங்கட் கிடமேற்படாது. காதலென்ன என்பதையும், அதன் தூய்மையையும், அதன் முழுமையையும் இன்று சமூகத்திலுள்ளவர்கள் விளங்காமலிருக்கின்றனர். விளங்கினவர்களாக இருந்தால் மக்கள் சமுதாயம் இன்று கடவுள் நெறியில் முன்னேறி கண்ணியமான வாழ்க்கை வாழலாம். அன்பு வாழ்க்கை அமைதியுடன் ஆறறலாம். பண்பு வாழ்கக்கை பாரெலாம் போற்ற வாழலாம். "கலைகள் கற்றுக் கடிமணம் புரிவீர்" என்பது ஆன்றோரின் அமுதவாக்கு. கலைகள் கற்று அதன்பின் காதல்பூண்டு கடிமணம் புரிவது வாழ்க்கையின் பயனை வளமுற அளிக்கும். பண்டைக்காலத்துப் படித்த அறிவாளிகள் ஏறக்குறைய முப்பது முப்பத்தைந்து வயது வரையும நன்றாகக் கற்றுத் தேர்ந்த பின்புதான் இல்லற வாழ்விற்புகுவர். அதனுல் அவர்கள் வாழ்க்கை பல துறைகளிலும் வளமுற்றும், எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்தது. இன்று இருபது வயதிற்குள் பெரும்பான்மையாகக் காதலில் ஈடுபட்டு விடுகின்றனர். சிலர் கலியாணத்திலும் விழுந்துவிடுகின்றனர், இவர்களின் வாழ்க்கை வளம்பெறுவதெங்ஙனம்? கற்குங் கல்வியும் உத்தியோகக் கல்வியேயன்றி உண்மைக் கல்வியல்ல. உறுதி பயக்குங் கல்வியல்ல. மெய்க் கல்வியாக இருந்தால் காதலில் தவறுத் தேவையில்லை. என்றோ ஒருநாள் காதல் கைகூடும். நம்பிக்கையில்லாமையே இன்று மக்களின் அல்லல்கட்குக் காரணம். நம்பிக்கை உண்மையின் அடிப்படையிலிருந்தே உருவாகிறது. உண்மை, என்றோ ஒருநாள் வெற்றியளிக்காமல் போகாது. ஆகையால் ஒவ்வொருவரும் உண்மைக் காதலை மேற்கொள்ள வேண்டும். மெய்க்காதலென்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது.

இன்றைய யுவதிகட்குக் காதலின் தத்துவத்தைப்பற்றித் தெரிவதில்லை. உண்மையாகத் தெரியின் காதலில் தவறத் தேவையுமில்லை. சமூகத்தில் வழுக்கி விழவுந் தேவையில்லை காதலின் அரவணைப்பில் சாந்திகாணத் தேவையுமில்லை. சமூகத்தில் வழுக்கி விழவுந் தேவையில்லை. காதலித்துக் கடிமணஞ் செய்தபின் குடும்பப்பிணக்குகள் இருக்கத் தேவையுமில்லை. அறிவற்ற காதல் அழிவைத்தான் கொண்டு வரும். அது காதலின்பாற்படடதல்ல.

இளைஞருலகம் காதற் கலையைக், காதலின் தத்துவத்தை, காதலின் முழுமையை, காதலின் தூய்மையை, பெருமையை, நன்றாகத் தெரியவேண்டும். தெரிந்த

செல்வி: த. மாலோகமணி

தொடர்ச்சி 4ம் பக்கம்

# நாளைய உலகம்

## கடவுள் நம்பிக்கைக்குக் கல்வி

வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தில் சென்னை நீதிபதி ஸ்ரீ ஏ. எஸ் பி. ஐயர்அவர்கள் "நாளைய உலகம்" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது, நாளைய உலகம் முழுவதும் அல்லோல கல்லோலமான நிலையில் இருக்கப் போகிறது. இன்று நாங்களோ முன்யோசனையின்றி உல்லாசமாகக் காலம் கழிக்கின்றோம். களிப்புக்காக நாங்கள் செய்யும் அட்டூழியங்கள் எத்தனை? அமெரிக்க, உருசிய விஞ்ஞானிகள் இன்று அணு, சலவாயுக் குண்டுப் பரீட்சைகள் செய்துஎத்தனையோகோடி சீவராசிகளை மாய்க்கின்றனர்.

"உலகில் எந்த நாடாவது சுதந்திர நாடு என்று கூறுவதற்கில்லை. எல்லா நாடுகளும் கொண்ட இந்த உலகம்தான் ஒரு சுதந்திர நாடு என்று கூறவேண்டும். ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் எல்லா நாடுகளும் ஒரு குடும்பத்தார் போல ஒற்றுமைபட்டு நாளைய உலகத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நாம் கடவுளில் நம்பிக்கை வைக்கவேண்டும். கடவுளில் நம்பிக்கை வைக்க வேண்டுமாயின் எமக்குக் கல்வியறிவு வேண்டும். இன்று உலகத்தில் 10 விகிதம்தான் மக்கள் கல்வியறிவுடையவர்களாக இருக்கின்றனர்.

இந்தியாவும் இலங்கையும் கலாசாரத்தைப் பொறுத்தவரையில் சகோதர நாடுகளே. இந்தியா பண்டைக் காலத்தில் ஆத்ம ஈடேற்றத்திற்கான வழிவகைகளில் பெரிதும் கவனம் செலுத்திற்று. இன்றும் இந்தியாவுக்கு ஆத்மீகத் துறையில் செல்வாக்குண்டு. இதனுல் அன்றே வல்லரசு நாடுகள்போன்ற உருசியாவிலும் இந்தியாவின் செல்வாக்கு அபாரமாகப் பரவியுள்ளது.

இப்படி எல்லா நாடுகளும் ஆத்மீகத் துறையில் முன்னேற வேண்டும். கடவுள் நம்பிக்கையில் சிறந்து விளங்கவேண்டும். அப்பொழுதுதான் நாளைய உலகம் சிறந்து விளங்கும் என்று கூறினர்.

### தாடி நரைத்தும் தலைநரையாததுஏன்?

விநோபாஜி அவர்களின் அறுபத்திரண்டாவது பிறந்தநாட் கொண்டாட்டத் தொடர்பில் அவருக்குத் தாடி நடைத்துத் தலைநரையாமலிருப்பது எப்படி என்று பத்திரிகையாளர் கேட்டபொழுது தமக்கு எவ்வித கவலையோ ஏக்கமோ இல்லாததாலேயே தமது தலைமயிர் இன்னமும் முற்றிலும் கறுப்பாகஇருப்பதாக அவர் விளக்கம் கூறினராம். இரவில் படுத்த உடன், ஒரு நிமிடத்திற்குள்ளாக அயர்ந்து விடுவதாகவும், படுக்கையில் எதையும்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் பழக்கம் கிடையாதென்றும் மேலும் சொன்னராம். அஃதே தலை நரையாமைக்குக் காரணமாயிற்று. தேன் நெய் முதலியவற்றை அருந்தும் பொழுது அவை தாடியிற் பட்டமையே தாடி நரைத்ததற்குக் காரணமாகவும் அறியவந்தது.

### கொழும்புக்கு அடுத்தது காலியாம்

வியாபார எற்றுமதி இறக்குமதி வசதிகளெல்லாம் கொழும்புக்கு அடுத்தபடியில் அமையுமாறு காலித் துறைமுகம் திருத்தப்படவேண்டுமென்று காணி அபிவிருத்தி மந்திரி ஸ்ரீ சி. பி. டி. சில்வா தலைமையில் காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதாம். அதன்படி வேண்டிய நடவடிக்கைகள் போக்குவரத்து மந்திரியால் எடுக்கப்படுகின்றன என்றும் குறிக்கப்படுகின்றது.

# நிலையாமைபற்றி நினைவு

## நாலடியார் காட்டும் உவமை

ஸ்ரீ வ. குகசர்மா

நாலடியார் சங்க நூல்களில் ஒன்று, அது பதினெண்கிழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்குகிறது. இந் நூலை ஆக்கியோர் சமண முனிவர்கள். நானூறு வெண்பாக்களால் ஆக்கப்பட்ட இந் நூலில் பெரும்பாலும் நீதியே எடுத்துரைக்கப்படுகிறது. இதில் நீதியை விளக்க எடுத்தாளப்படும் உவமைகள் இயற்கையோடுபொருந்தியவையாய், யார்க்கும் எளிதில் விளங்கக்கூடியவையாய் மனதிற் பதியத்தக்கவையாயுள்ளன. இக்கட்டுரையில் நிலையாமைபற்றி நாலடியாரில் கூறிய உவமைகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

நிலையாமைபற்றிக்கூறும்போது செல்வம், யாக்கை, இளமை, ஆகிய மூன்றினதும் நிலையாமையை நாலடியார் எடுத்துப் பேசுகிறது. அறிவில்லாதவரிடத்தில் செல்வம் வந்து சேர்ந்தால் அவர்களுக்குத் தாம் செல்வர் என்ற எண்ணம் வந்துவிடும். பின்னுக்கு வருவதை யோசிக்கமாட்டார்கள். அவர்களது செல்வம் அழிந்துவிடும். மின்னல் மின்னியவிடத்தில் எவ்வாறு இருட்டுப் படிந்து அந்த அடையாளத்தை நீக்கிவிடுமோ அந்தவிதமே செல்வர்களாயிருந்த அடையாளமேஇல்லாதபடி அழிந்துபோம்.

"எல்லில் கருங்கொண்மூ
வாய் திறந்த மின்னுப்
போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும்"

சிலர் செல்வம் தேடுவதற்காக நல்ல உணவு உண்ணமாட்டார்கள். நல்ல உடை உடுக்கமாட்டார்கள். தருமம செய்யமாட்டார்கள். பொன் காத்த பூதம்போல அதைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அந்தச் செல்வத்தால் ஒரு உபயோகமும்இல்லாமல் அதை அவர்கள் இழந்துவிடுவார்கள். இந்த உண்மை ஒரு உவமைமூலம் விளக்கப்படுகிறது. தேனீ ஒரு சுறுசுறுப்புள்ள பிராணி. வளமுள்ள சோலையிலும் தடாகங்களிலும் சென்று சுவையுள்ள தேனைச்சேர்க்கிறது. ஆனுல் உடனே செலவழிப்பதில்லை. ஒருநாளைக்குக் காடி போன்ற மிருகமோ மானிடரோ தேனீக்களைத் துரத்தித் தேனைக் கைப்பற்றிவிடுவார்கள்.

"வைத்தீட்டினு ரிழப்பர்
வான்றோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி"
என்பது நாலடியார் வரி.

ஒரு ஆட்டைப் பலி கொடுப்பதற்காக ஆலயத்தில் கொண்டுபோய் கட்டியிருக்கிறார்கள். வேலைப் பிடித்திருக்கும் ஒருவன் கையிலே இலைகளைக் கலந்து மலர்களாற்தொடுத்த மாலையை வைத்திருக்கிறன். ஆடு தனக்கு முன்னுல் மறு ஆடுகள் பலியிடப்படுவதையும் கவனிக்கவில்லை. தனக்கு மரணம் கிட்டுகிறது என்பதையும் கவனிக்கவில்லை. அந்த மாலையிலேயுள்ள இளம் தளிரை உண்பதிலேயே கவனம் செலுத்துகிறது. மானிடராகிய நாங்களும் பகுத்தறிவில்லா ஆட்டைப்போல அற்ப இன்பத்தில் மகிழ்கின்றோம். "கடல் அலைகள் பருக்கைக் கற்கள் உள்ள கரையில் வந்தடிப்பதைப் போல எங்களுடைய நிமிடங்கள் முடிவுக்கு விரைகின்றன" என்று ஒரு ஆங்கிலப் புலவர் கூறுகிறார். யார் எது சொன்னாலும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# பால்வேறு நீர்வேறு காட்டும் பரிசோதனைகள்

———0———

**( இரசாயனப் பகுப்பாளர்களின் பால்வகைப் பரிசோதனை அறிக்கை )**

1954-ம் ஆண்டு 3,746 மாதிரிகளும் இவ்வாண்டு 4,345 மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டன.

சௌக்கியப் பகுதியாரால், இவ்வாண்டு அனுப்பப்பட்ட மாதிரிகளில் 1,568 மாதிரிகள் சுத்தமானவையாயும், 98 மாதிரிகளில் 5 சத வீதத்துக்குக் குறைய நீர் சேர்க்கப்பட்டும், 77 மாதிரிகளில் 25 சத வீதத்துக்குக் குறையாமலும் 50 சத வீதத்துக்கு அதிகப்படாமலும் நீர் சேர்க்கப்பட்டும், 15 மாதிரிகளில் 50 சத வீதத்துக்கு மேல் நீர் சேர்க்கப்பட்டும், 395 மாதிரிகளில் கொழுப்புக் குறைவாகவும், 46 மாதிரிகளில் மேலதிகமாகச் சீனி சேர்க்கப்பட்டும் இருந்தன.

மிகக்கூடுதலாகச் சேர்க்கப்பட்ட நீரின் வீதம் 58 எனவும், மிகக் குறைவாகக் காணப்பட்ட கொழுப்பின் வீதம் 84 எனவும் அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 664 மாதிரிகள் புளித்துப்போய்க் கிடந்தன. சில வைத்தியசாலைகளினால் அனுப்பப்பட்ட மாதிரிகள் எல்லாம் புளித்துப்போய்க் கிடந்தன. சுத்தமில்லாத போத்தல்கள் பாவித்தல், பால் புளித்துப்போகாமல் காப்பாற்றுதற்குச் சேர்க்கப்படும் வோமலின் போதிய அளவு சேர்க்கப்படாமை ஆகிய காரணங்களினால் மாதிரிகள் புளித்துப்போயிருக்கலாம். சில மாதிரிகளில் அளவுக்கு அதிகமான வோமலின் சேர்க்கப்பட்டிருந்தது. 12 அவுன்ஸ் பால் மாதிரியொன்றில் மூன்று துளி வோமலினுக்குப் பதிலாக ஒரு அவுன்ஸ் வோமலின் சேர்க்கப்பட்டிருந்தது. மூன்று வைத்தியசாலைகளிலிருந்து கிடைத்த மாதிரிகளில பாதிக்கு அதிகமானவைகள் அசாதாரணமாக மிகவும் கூடிய வீதக் கொழும்பையும் கட்டிப்பொருட்களையும்கொண்டிருந்தன. எருமைப் பால் கலப்பதனால் இவ்விதம் ஏற்பட்டிருக்கலாம். வேறு மூன்று வைத்தியசாலைகளிலிருந்து கிடைத்த மாதிரிகளில் மூன்றிலொரு பங்களவு மாதிரிகளில் மேலதிகமாகச் சீனி காணப்பட்டது. சீனி சேர்த்த கட்டிப்பால் சேர்ப்பதோ அல்லது சீனி சேர்ப்பதோ இதன் காரணமாயிருக்கலாம்.

உள்ளூர் ஆட்சிச் சபைகளால் அனுப்பப்பட்ட பால் மாதிரிகள்:—

68உள்ளூர் ஆட்சிச்சபைகளுக்காக 1954-ம் ஆண்டு 664 மாதிரிகளும் இவ்வாண்டு 914 மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டன.

இவ்வருடத்தில் கிடைத்த மாதிரிகளில்165 (18.1வீதம்) சுத்தமானவையாகவும் 34 மாதிரிகளில் 5 சத வீதத்துக்கு அதிகப்படாமல் நீர் சேர்க்கப்பட்டும், 250 மாதிரிகளில் 25 வீதத்துக்குக் குறையாமலும் 50 சதவீதத்துக்கு அதிகப்படாமலும் நீர்சேர்க்கப்பட்டும், 85மாதிரிகளில் 50 சத வீதத்துக்கு அதிகமாக நீர் சேர்க்கப்பட்டும், 164 மாதிரிகளில் கொழும்புக் குறைவாகவும், 1 மாதிரியில் மேலதிகமாகச் சீனி சேர்க்கப்பட்டும் இருந்தன.

மிகக்கூடுதலாகச் சேர்க்கப்பட்ட நீரின் வீதம் 72 எனவும், மிகக்குறைவாகக் காணப்பட்ட கொழுப்பின் வீதம் 96 எனவும் அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன. மிகக் குறைவாகக் கொழுப்புக் காணப்பட்ட மாதிரிகள் கடைந்த பால் மாவின் கரையலாக இருக்கலாம்.

கிடைத்த மாதிரிகளில் 177 புளித்துப் போயிருந்தன. சில உள்ளூராட்சிச் சபைகளால் அனுப்பப்பட்ட மாதிரிகள் யாவும் புளித்துப்போயிருந்தன.

உணவு அதிகாரியால் அனுப்பப்பட்ட பால் மாதிரிகள்: —

1954-ம் ஆண்டு 277 மாதிரிகளும் இவ்வருடம் 823 மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன. இவ் வருடத்திய மாதிரிகளில் 417 மாதிரிகள் சுத்தமானவையாகவும், 54 மாதிரிகள் 5 சத வீதத்துக்கு அதிகப்படாமல் நீர் சேர்க்கப்பட்டும், 42 மாதிரிகள் 25 வீதத்துக்குக் குறையாமலும் 50 வீ[illegible]க்கு அதிகப்படாமலும் நீர் சேர்க்கப்பட்டதாகவும், 1 மாதிரி 50 சத வீதத்துக்கு அதிகமாக நீர் சேர்க்கப்பட்டதாகவும், 178 மாதிரிகளில் கொழுப்புக் குறைவாகவும், 8 மாதிரிகளில் மேலதிகமாகச் சீனி சேர்க்கப்பட்டும் இருந்தது. 337 மாதிரிகள் புளித்துப் போய்க் கிடந்தன. மாதிரிகள் சேர்ப்பதற்கு அசுத்தமான போத்தல்களைப் பாவித்தல், மாதிரிகளை இவ் வாய்வுக் கூட்டத்துக்கு அனுப்புவதில் சுணங்குதல் முதலியன மாதிரிகள் புளித்துப்போனமைக்குக் காரணமாயிருக்கலாம். மிகக் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட நீரின் வீதம் 53 எனவும் மிகக்குறைவாகக் காணப்பட்ட கொழுப்பின் வீதம் 48 எனவும் அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

———

# உண்மைக் காதல்

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

பின்பே காதலில் ஈடுபடவேண்டும். உண்மைக் காதல் கைகூடாவிடின் சாதலை மேற்கொள்வது கோழைத்தனம். பெலவீனம். உண்மைக்கு ஒருபோதும் அழிவில்லை. உண்மை என்றும் உண்மைதான். உண்மைதான் இறைவன்; உண்மைதான் எல்லாம். அப்படியிருக்க உண்மை ஏன் கைகூடாது. நிச்சயமாகக் கைகூடியே தீரும். உண்மை வழியைத் தவறி உண்மைக்குப் புறம்பான வழிகளைக் காதலர்கள் கைக்கொள்வதனால்தான் தற்கொலைகளும் சண்டைகளும் ஏற்படக்காரணமாகின்றனெனலாம். 'உண்மைக்கும் நேர்மைக்கும் அன்பிற்கும் உயர் இலட்சியத்திற்கும் இன்று உலகம் மாறு, ஏனெனில் உண்மைக்குப் புறம்பானவர்களும், அன்பற்றவர்களும், பொறாமைகுடிகொண்டவர்களும்; நேர்மையற்றவர்களும், சிரிய இலட்சியமற்றவர்களும் இன்று பெரும்பான்மையாக மலிந்து இருக்கின்றனர். நேர்மையாளர்கட்கும் உத்தமர்கட்கும் இடையூறுகள் ஒன்றன்பின்னொன்றாகச் சூழ்ந்தபடியேதானிருக்கும். ஆன்மநேயம் பூண்ட, இதய பூர்வமான உள்ளக்காதல் மலையத்தனை இன்னல்கள் எதிர்வந்து இடையறாதின்னல் புரியினும் ஈற்றில் வெற்றியதன் கண்ணதே. உண்மை வழியில் உறுதியாக நிற்பதே வெற்றிக்கு வழி. வெற்றியின் இரகசியம் அதுவே. உண்மையின் அடிப்படையில்தான் ஆத்ம சக்தியுண்டு, ஆத்ம சக்தியே உண்மைக்கு உறுதுணை புரிவது. ஆத்ம சக்திக்குமுன் அணுக்குண்டு தானும் ஆற்றல் குன்றும்.

இளைஞர்களே! எதிர்கால உலகின் சுபீட்சம் உங்கள் கையிற்றானிருக்கின்றது. மெய்க் கல்வியைக் கற்று உண்மையின் அடிப்படையில் உயர்ந்த வாழ்க்கையை உருவாக்குங்கள். வையத்துள் வசை மொழிகளைத் தவிர்த்து ஒவ்வொருவரும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதும் இளைஞர்களாகிய உங்களின் முக்கிய கடமை என்பதை நன்றாகச் சிந்தியுங்கள். இதய பூர்வமாக உணருங்கள்.

"எப்பொருள் எத்தன்
[மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள்
காண்பதறிவு"

———

# நிலையாமைபற்றி நினைவு

3–ம் பக்கத் தொடர்ச்சி

எமது மனம் அற்ப இன்பத்தையே நாடுகிறது. ஞான அறிவுடையார் இந்த அற்ப இன்பத்தில் மகிழமாட்டார்கள்.

"வெறியயர் வெங்களத்து
வேல் மகன் பாணி
முறியார் நறும் கண்ணி
முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன
மன்று மகிழ்ச்சி
அறிவுடையாளர்கண் இல்"

என்பது நாலடியார் தரும் கருத்து.

நாம் இப்போது இளமையுடையவர்களாக இருக்கிறோம். வயது முதிர்ந்த காலத்தில் அறம் செய்யலாம் என்று சிலர் நினைக்கக்கூடும். கடும் காற்று அடிக்கும்போது மரத்தில் உள்ள முற்றிய கனிகள் மாத்திரமல்ல, காய்; பிஞ்சு யாவும் உதிர்ந்துபோதலும் உண்டு. அது மாத்திரமல்ல மரண தேவன் அருளில்லாதவன் அதோ பார் மகனை இழந்த தாயின் அலறலை என்று எமக்குச் சுட்டிக் காட்டுகிறது நாலடியார்.

ஒருவன் இறந்த பின் சுற்றத்தார் கூடுவார்கள், புலம்புவார்கள் பிணத்தைக்கொண்டு சென்று சுடுகாட்டிலிடுவார்கள். இந்தக் காட்சியை ஒருமுறையல்லப் பலமுறை பார்த்த பின்பும் வாழ்க்கை உண்டு என்றுதான் சொல்கிறோம். அவ்வாறு சொல்லாதீர்கள் வாழ்க்கை நிலையற்றது என்பதை நினைப்பூட்டவே மரணச்சடங்குகளில் பறையடிக்க வேண்டும் எனத் தமிழ்நாட்டார் வகுத்திருந்தார்கள் என்பதை பின் வரும் நாலடியார் அடிகளிலிருந்து அறிகிறோம்.

"மணங்கொண்டீண்டு
உண்டுண்டுண்டு என்னும் உணர்
வினான் சாற்றுமே.
டொண் டொண் டொ டென்
னும் பறை"

"நீர்குமிழிக்கு நிகரென்பர்
யாக்கை"

என்ற கந்தலரங்காரக் கருத்தை,

"படுமழை மொக்குளில் பல்
காலும் தோன்றி
கெடுமிதோர் யாக்கை"

என்ற நாலடியார் வரிகளில் காணலாம்.

"குடம்பை தனித்தொழியப்
புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்ற வள்ளுவன் உவமையை

"சேக்கை மரனொழியச் சேண்
நீங்கு புள்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து"

என்ற அடிகளில் காணலாம். இவ்வாறன் வேறு பல நல்லுவமைகளும் நிலையாமை என்ற பகுதியில் உள்ளன. அவைகள் இன்பம் பயப்பதுடன் எமது நல்வாழ்வுக்கும் துணை செய்வனவாகும்.

—

## இந்து ஆலயச் சட்டம்

இந்து ஆலய அறநிலையச் சட்ட திட்டம் காலதாமசமின்றி ஆராயப்பட்டு அரசாங்கத்தாற் கையாளப்படுமென அரசாங்க மேற்சபையில் உள்நாட்டு மந்திரி கூறியுள்ளார்.

—

## குறளும் கீதையும் காட்டுவது ஒரே நெறி

திருநெல்வேலி இந்துவாலிபர்சங்க ஆதரவில் தலைவர் திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் பாரதி விழா நடைபெற்றது. அத்தருணம் கலாநிதி வ. பொன்னையா அவர்கள் பேசும்போது திருக்குறளும் கீதையும் ஞானநெறியையே போதிக்கின்றன. இல்லறமென்பது தனக்கென ஓர் இல்லம் வகுத்து அதன்கண் நின்று செய்யும் அறமாகும். துறவறமாவது மனத்திலே அவ்வில்லத்தைத் துறந்து நின்று செய்யும் அறமாகும். வள்ளுவன் வழியும் கண்ணன் வழியும் பயனளவில் வேறுபடா. தவம் செய்வோர் தத்தமக்கு இயைந்த வழியில் நின்று உய்தியடையலாம் என்று கூறினார்.

## பாக்கிஸ்தானின் புதிய வெளிநாட்டுக் கொள்கை

பாக்கிஸ்தானின் புதிய முதல்மந்திரி ஜனப் சுகிர்தவர்த்தி தமது கொள்கை பற்றி மக்களுக்கு வானொலியில் விளக்கும்போது மேற்கு நாடுகளுடன் செய்துள்ள ஒப்பந்தங்களைப் பாக்கிஸ்தான் மதித்து நடக்கும். ஆனால் சர்வதேச அரசியலில் மேற்குநாடுகள் பாக்கிஸ்தானை ஓர் பகடையாகக் கையாள முடியாது என்று கூறினார்.

உணவு முதலாவதாகப் பிற பல துறைகளிலும் அபிவிருத்தி வேலைகளை விரைந்து செய்யத் தாம் முயல்வதாகவும் கூறினார்.

———

உ

வெளிவந்துவிட்டது

**தஞ்சைவாணன் கோவை**

சொக்கப்ப நாவலர் உரை

( இரண்டாம் பதிப்பு )

வித்துவான் ந. சுப்பையபிள்ளை

அவர்களால்

திருத்திப் புதுக்கி அமைக்கப்பெற்றது.

அதிபர் சைவப்பிரகாச யந்திரசாலையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா: 6-00

## நீர்வேலிக் கிராமச் சங்க வேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்வரும் காணப்படும் கிராம வேலைகள் ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன;-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்ய வேண்டும். அப் பத்திரங்கள் 1956 ம் ஆ. புரட்டாதிமீ 27-ம்உ வியாழக்கிழமை பகல் 12மணிக்கு முன் உரும்பராய் ஷெ சங்கக் கந்தோரில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டுக் கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி, நீர்வேலிக் கிராமச்சங்கத் தலைவருக்கென விலாசமிட்டு 1956-ம் ஆ. புரட்டாதி மீ 29-ம்உ சனிக்கிழமை பகல் 10 மணிக்கு முன் ஷெ உரும்பராய் சங்கக்கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் ஷெ சங்கத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக்கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு.

### வேலைகளின் விபரம்

1. நீர்வேலி வடக்கு கேராளிவத்தை ஒழுங்கையை ரோட்டாகத் திருத்துகிறதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் அழைக்கப்படுகிறது.

கிராமச்சங்கத் தலைவர்,
நீர்வேலி.
1956-ம் ஆ. புரட்டாதிமீ 18உ
M. 354 21, 28-9 56.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல: M B. 283.
1. வேலுப்பிள்ளை சண்முகம்
2. பெண் சரஸ்வதி, களபூமி காரைநகர் —வழக்காளிகள்
1. அப்புக்குட்டி வேலுப்பிள்ளை
2. பொன்னையா இரத்தின கோபால்
சிறுப்பிட்டி வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B 283 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1956 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி (20-11-56) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபாய் 1280/-உம் இதில் ரூபாய் 1000/= க்கு 2-6-55 தொடக்கம் 23-12-55 திகதிவரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத்தொகையில் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 192-87 சதமும். இதில் ரூபாய் 1280/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "ஊமை வயல் பிள்ளை புலம் தாளை மொட்டை" நெல் பர நாலும் வீடும் தலைவாசலும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு குருநாதர் இளையதம்பியினுதனம், வடக்கு ரோட்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு மயில்வாகனம் பெண் செல்லம்மாவுக்கும் மேற்கெல்லையிலிருக்கும் கை ஒழுங்கையில் அரைவாசிப் பங்கும்.

மூற் பதிப்பு D 138/=170,

தா. செல்லையா
கொமிஷனர்.

No 37, Colombogam Road,
Chundikuli, Jaffna.
M 351 21-9-56. (ரு. 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல: 11546.
காலம் சென்ற கந்தர் வேலுப்பிள்ளை பொன்னையா காரைநகர் கிழக்கு.
1 பொன்னையா வேலுப்பிள்ளை காரைநகர்
2. P. மயில்வாகனம்,
P. ஆறுமுகம்,
பதில் வழக்காளிகள்.
வயிரமுத்து சுப்பிரமணியம், மானிப்பாய் வட்க்கு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 11546 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1956 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆரும் திகதி (6-11-56) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 2326/25 உம் இதில் ரூபாய் 2000/ க்கு 21-8-54 தொடக்கம் 19-3-56 திகதிவரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத் தொகையில் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 395/27 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, மானிப்பாய்க் கோவில்பற்று மானிப்பாயிறை சூரியன் தோட்டம் ஆராட்சியாவளவும் "பெரிய வளவும்" நில. பர. 5½ ஜந்தரை கிணறும் பயிர்களும் கிணற்றில் மறுபேருக்குரிய கிணற்றுப்பங்கு பிற நீங்கல்,

எல்லை கிழக்கு நன்னிபர் சின்னட்டியருக்கும் கந்தர் நன்னியருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு கந்தையா பெண் அன்னபபிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு அப்புத்துரை பெண் இரத்தினத்தின் ஆதனமும் கை ஒழுங்கையும் தெற்கு நாகர் வயிரமுத்து பெண் தங்கத்துக்குரிய ஆதனம்.

முற் பதிப்பு E 269/127,

தா. செல்லையா
கொமிஷனர்.

No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna.
M 350 21-9-56 (ரு 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 11714
காரைதீவு கிழக்கு களபூமி
1. வேலுப்பிள்ளை சண்முகம் பெண்
2. சரஸ்வதியும்
— வழக்காளிகள்.
எதிராக
வண்ணார்பண்ணை கிழக்கு கன்னாதிட்டி
1. தம்பு நடேசுவும் பெண்
2 தையல்முத்துவும்
சுதுமலை தெற்கு
3. இளையதம்பி விசுவநாதனும் பெண்
4. சின்னத்தங்கச்சியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11714-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் முதலாம் துண்டுக்காணி முற்பகல் 9மணிக்கும் இரண்டாந் துண்டுக்காணி முற்பகல் 10மணிக்கும் கார்த்திகைமாசம் 15-ந் திகதி வியாழக்கிழமை 1956-ம் ஆண்டு அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா. 2086/= ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் ரூபா, 1500/=க்கு 12 வீத வட்டி 27-9-54 தொடக்கம் 16-12-54 வரைக்கும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 27-9-54 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா. 192 - 02

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை இளஞ்சிங்கனே

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
நாவலர் ரோட் யாழ்ப்பாணம் சுப்பையா பொன்னம்பலம் கந்தையா வழக்காளி
இல. M. B. 130
எதிராக
1 வேலனை மேற்கு வேலணை மூத்து கணபதி சின்னத்தம்பி
2 ஷெ ஊர்பெண் வள்ளியம்மை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 130 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1956 ஞு ஐப்பசி மாதம் 6-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை வட்டி முதல் ரூபா 2655 ம் ரூபா 2000 க்கு 12-3-55 தொடக்கம் 17-8-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 208-40 சதம்.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "நெல்லி நின்றமும் மேற்கு வெள்ளடியும்" பர நெ. இலா பதினெட்டு (பர நெ. இல. 18) ஆனால் ஆட்சியின் படியும் அளவின்படியும் பர நெ இலா. இருபது (பர. நெ. இல. 20) எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கேணி மேற்கு கேணியும் நாகலிங்கம் பரகிருபசிங்கத்திற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு நாகலிங்கம் பரகிருபசிங்கத்திற்குரிய ஆதனம். இதடங்கலும்,

2 ஷெ. வேலணை மேற்கிறை "ஆலம்புலம் பிரிவும் ஆலம்புலம் மேற்கும்" பர நி இல 9 குழி 4 1 4 விடும் பனைகளும் எல்லை கிழக்கு K. சேனாதிராசா பெண் சிவஞானம்மாவின் பாவிப்பிற்காக விடப்பட்ட ஒழுங்கையும் சொல்லப்பட்ட சிவஞானம்மாவின் ஆதனமும் வடக்கு சதாசிவம் பெண் சிவரெத்தினத்திற்குரிய வாதனம் மேற்கு செல்லத்துரை பெண் நாகம்மாவின் ஆதனம் தெற்கு K. சேனாதிராசா பெண் சிவஞானம்மாவிற்குரிய வாதனம்,

3 ஷெ. வேலணை மேற்கிறை "அரவராபருத்தி" பர நில இல. 17 குழி 12, இதில் வடக்குப் பக்கமாக சட்டுக்காரரின் மகள் சிவஞானம்மாவிற்குச் சீதனம் கொடுதத பர நில இல 8 குழி 15 க்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தையா சேனாதிராசா பெண் சிவஞானம்மாவின் ஆதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு கந்

---

டாவிவிறை 17 குழியும் விடும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றிலரைவாசியும் எல்லை கிழக்கு ஆறுமுகம் இராசேந்திரத்துக்கும் பங்காளருக்குமுடைய வாதனமும் வடக்கு நாகலிங்கப்பத்தர் செல்லையாப் பத்தருக்கும் பங்காளருக்கு முடைய வாதனங்கள். மேற்கு தப்புநாதர் தம்பிப்பிள்ளைக்குடைய வாதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும் அதுடன் ஒழுங்கையில் ஒரு பங்கு இக்காணிக்குச் சேர்ந்தது. இக்காணி D 208/96-ம் இலக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது.

2. ஷெ நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை சூரியன் வளவும் விளாத்தியடியும் நி. பரப்பு 1½ யும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும், எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையினுதனம், வடக்கு சின்னத்தம்பி ஆறுமுகத்தினுதனம், மேற்கு செல்லையா பெண் காமாட்சியினுதனம், தெற்கு ஒழுங்கை, இக்காணி D 208/97-ம் இலக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51, 4ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
M 352 21-9-56. (ரு. 200)

# வைத்திய கலாநிதி குமாரன் இரத்தினம் மறைவு

வைத்தியகலாநிதி குமாரன் இரத்தினம் இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்துவிட்டார். கொழும்பு கணத்தை மயானத்தில் அவருடைய சமக்கிரியைகள் நடைபெற்றன. கொழும்புமாநகர சங்க மூலமாயும் பிற பல வாறும் அவர் மக்களுக்குச் செய்த சேவைகளைப் பாராட்டிப் பல சொற்பொழிவுகளாற்றப் பெற்றன. வைத்திய கலாநிதி இரத்தினம் கொழும்புமாநகர சங்கத்தில் அங்கத்தவராயும் தலைவராயும் இருந்து மக்களுக்காக அரும் பாடுபட்டவர்,

தந்தையாரின் வைத்திய சாலை மூலமாக ஏழைகட்கு பேருதவி புரிந்தவர். கொழும்புத் தட்டாரத்தெரு சிவசுப்பிரமணியசுவாமி கோயிலின் தருமகர்த்தாவாகக் கடமையாற்றியவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் காலஞ்சென்ற திரு. அ. குமாரசுவாமி அவர்களின் புத்திரியை மணஞ்செய்தவர்

சமூகசேவையைத் தமது கடமையாகக் கொண்டு நற்பணி புரிந்த இவரின் பிரிவில் நாம் மிகவும் அநுதாபப்படுகின்றோம்.

## அரசியல் அலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையிலே தான் போக வழி தெரியாத அந்தப் பிராணிபோல பிரதமர் உலக விவகாரங்களிலும் பங்குபற்ற எண்ணி வருவதுதான் நூதனமாகின்றது. நேருப் பெரியாரின் நிழலிலே நின்று பெருமையடைய விரும்பும் இவர் இலங்கையில் என்ன பெருமையடைந்திருக்கிறார் என்று நினையாதிருக்கின்றாரே.

---

தையா பெண் செல்லம்மாவின் ஆதனம்,
1956-ம் ஞு புரட்டாதி மீ 1ம்உ
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
காரைநகர்.
M 353 21-9-56 (ரு. 300)

## நகரசபைத் தீர்மானங்கள்

இப்பொழுதுள்ள கல்வி முறை உத்தியோகம் பார்ப்பதற்கு மாத்திரம் ஏற்றதாயிருப்பதால் இந்நாட்டுக் கல்வித் திட்டத்தில் கமத்தொழிற் பயிற்சி கைத்தொழிற்பயிற்சி ஆகியவற்றுக்குத் தகுந்த இடம் கொடுக்கப்படுதல் வேண்டும் என்று கல்வி அமைச்சருக்கு ஆலோசனை கூறுமாறு பிரேரணை ஒன்று ஸ்ரீ ஜே. எஸ் நிக்கலஸ் அவர்களாற் பிரேரிக்கப்பட்டு முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களால் அனுவதிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றது.

நல்லூர் கொக்குவிற் பகுதிகளை யாழ்ப்பாண நகரசபை எல்லையுட் சேர்ப்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு மற்றொரு பிரேரணை ஸ்ரீ. ஜே. எஸ் நிக்கலஸ் அவர்களாற் பிரேரிக்கப்பட்டு காதி. எம். எம். சுல்தான் அவர்களால் அனுவதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பெற்றது

## வாழ்க்கை வானில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கைக் கண்டனம் செய்தபடியிருக்கின்றார். அமைச்சவைக் குடும்பத்தின் அமைவுதான் என்னே!

**அரிசி அளவு பழையபடியா?**

கொழும்புத் துறைமுகத்திலே "கொழுத்தாடு" பிடிக்கும் தொழிலாளர் சங்கங்கள் நாட்டின் பொருளாதார நிலையைப்பற்றிநினைக்கின்றார்களில்லை. சுவெசுத் தகராற்றுக் காற்று வீசும் பொழுதே திருவாளர் 'கள்ள வியாபாரம்' தூற்றிவிட ஆரம்பித்து விட்டதோடு நின்றுவிடவில்லை. துறைமுகத் தொந்தரவும் தொடர்ந்து வந்தமை குருசந்திர யோகமாய்விட்டது. இதன் பயனாக மக்களுக்காக மார்புதட்டித் தேர்தல் நடத்திய ஐக்கிய முன்னணி அரசாங்கம் இப்பொழுது மார்பு அடித்து அரிசி அளவைக் குறைக்கும் நெருக்கடியிற் சிக்கிக் கொண்டது. ஆயிரம் ஆயிரமாக வாக்காளர்கள் 'சாது சாது' என்று ஆர்ப்பரித்துக்கொண்டு மக்கள் ஆட்சியை நிறுவி வைத்தார்கள். அதற்கு ஆதிக்கக் கட்சி செய்துவரும் கைம்மாறு இதுதான்!

**சுவெசுவைப் பற்றிச் சூழ்ச்சி!**

சதுரங்க விளையாட்டிலே 'காய்களை' மாறி மாறி வைத்து ஏமாற்றம் செய்வதுபோலச் சுவெசுப் பிணக்குச் சம்பந்தமாக இதுவரை நடைபெற்ற சூழ்ச்சிகளோ சில. இனி வரவிருப்பனவோ பல. ஏகாதிபத்திய அனுபவமுள்ள இங்கிலாந்து மாசாலஞ் செய்கிறதென்று ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் அவர்கள் நுணுக்கமான விமர்சனம் கூறியிருக்கின்றார். நெருப்புடன் விளையாடுகின்றனர். மேற்கு நாடுகள் என்று வேதாந்தம் பேசும் உருசியா தழலைத் தணியவிடாத வகையிலே தாளம் போடுகின்றது. நாசரைச் சாட்டித் தங்கள் தங்கள் கோபத்தைத் தீர்த்து நாட்டாண்மை காட்டப் பாடுபடும் வல்லரசுகளுக்குப் பாடம் படிப்பிக்கவேண்டுமேயானல் உலக யுத்தம் ஒன்று அவசியம் தேவையென்றுகூட எண்ணவேண்டியதாய்விட்டது நிலைமை. சுவெசுக் கால்வாய் வழியை உபயோகிக்காது விலத்திப் போக்குவரவுசெய்ய மேற்கு வல்லரசுகள் முயன்றால் பாருக்கு நட்டம்? சூழ்ச்சி யுத்தம சுவெசுவிலேதான் ஆரம்பமாகும்.

---

## கோலாலம்பூர்க்
# குமரக் கடவுள் கோவில்

1-ம் பக்கத் தொடர்ச்சி

டில் ஈடுபட்ட நாள் தொடங்கித் தமது பணத்தையும் நேரத்தையும் தேக உழைப்பையும் தாராளமாகக் கொடுத்துள்ளார் ஒருவர். இத் தொண்டர் முன்னுட் செலவழித்த பணம் ஒருபுறமிருக்க மேற்குறித்த வேலைகட்கே 1000-00 வரையிற் செலவிட்டிருக்கிறார். இவருடைய பெயரைக்குறிப்பிடாது விடின் எமது கடமையினின்று தவறினவர்களென்ற குற்றத்திற் காளாவோமல்லவா? திரு.நா.கார்த்திகேசு அவர்களையே இங்கு குறிப்பிடப்பட்டுளது.

வடக்கு வீதியில் வெற்று நிலமாயும், கல், முட் செடியுடன் இருந்த இடம் இன்று தென்னை, கமுகம்பிள்ளைகள்; வாழைகள், மற்றும் மலர் அரும்பும் செடிகள் கொண்ட இடமாகப் பச்சைப் பசேலெனக்காட்சியளிப்பதுமன்றி விடா முயற்சியின் பலனையும் காட்டுகின்றது. இது இன்னொரு தொண்டரின் பெரும் பயன். இவரும் தமது முயற்சியையும் உழைப்பையும், பணத்தையும் இதன் பொருட்டாக மனமுவந்து கொடுக்கின்றார். இதனால் வரும் சிறு வருவாயும் கோயில் நிதிக்கே சேருகின்றது. இவர்தான் திறம்படக் கடமையாற்றும் இச் சங்கத்தின் கௌரவ தனாதிகாரி திரு பொ. தனராசா.

இவ்விரு தொண்டர்களினதும் அவர்களின் உதவியாளர்களினதுஞ் சலியா உழைப்புக்கு எம்மால் எம்மட்டு நன்றி கூறமுடியும்! நாமெல்லோரும் வாழும் பொருட்டு முருகனுடைய திருப்பாதங்கட்கு மூன்று காலமும் குறையாது மலர் தொடுக்கும் பெரும் பேற்றைப் பெற்றவர்களின் பெருமையைக் கூறவும் வேண்டுமோ?

இன்று கோயில் மூன்று பக்கங்களும் மலர்வனவாகவே மிளிர்கின்றன. கோயில் வருவாயிலிருந்து செலவழியாமல் பாதுகாக்கப்பட்டும், விருத்தி செய்யப்பட்டும் வரும் இப் பூஞ்சோலை அப்பரின் அடிகளைப் பின்பற்றும் திருத்தொண்டிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவர்கள் வழியில் இன்னும் பல அன்பர்கள் முன்வருவார்களாயின் சமூகம் செழிக்கும், சமயம் ஓங்கும், அருள் பெருகும்.

திருவிழாக்கள்:

திருவிழாக்கள் உரிய காலங்களில் சிறப்பாக நடத்தப்பெற்றன. விழாக்களை விடக் கதிர்காமத் தினங்கள், நவராத்திரி, கந்தஷஷ்டி இன்னும் மற்ற விசேட தினங்களில் அபிஷேகங்கள் ஆராதனைகள் பல அன்பர்களால் கிரமமாகச் செய்யப்பட்டு வருகின்றன. உபயக்காரர்கள் கோயிற் காரியங்களை அதிக சிரத்தையுடன் நடத்தி வருவது போற்றத்தக்கது.

குருபூசைகள்:

சமயகுரவர் நால்வரினதும் சந்தான குரவர் ஒருவரினதும் குருபூசைத் தினங்கள் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றன. இந் நாட்களில் இப்பெரியார்கள் வரலாறு, அவர்களின் கற்பனைகள் இவைபற்றிச் சொற்பெருக்காற்றி விளங்க வைத்த பெரியார்கட்கும், செலவிற்கும் மன முவந்து பணங் கொடுத்த அன்பர்கட்கும் எம் நன்றி.

புராணப் படிப்புகள்:

பெரிய புராணப் படிப்பு சித்திரைத் திங்கள் ஆரம்பித்து சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசைத் தினத்தன்று (27-7-55) முடிவுற்றது. இடைக்கிடை விசேஷ படிப்புத் தினங்களில் மகேஸ்வர பூசையும் செய்யப்பட்டன. திருத்தொண்டர்களை முறைப்படி பூசிக்கவும் சைவ சமயத்தின் பெரும் காவியமாகிய இப் பெருஞ் சொல்லின் பெருமையை எல்லோருமறிய வேண்டுமென்ற பேரவாவினால் உந்தப்பெற்றுக் கீழ்க் காட்டிய முறையில் பூர்த்தி விழாவும், குருபூசையும் 31-7-55 ல் கொண்டாடப்பெற்றன.

கந்தபுராணம்

ஆண்டாண்டு நடந்தது போல் இவ்வாண்டும் பக்தி சிரத்தையுடன் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்லப்பட்டது. விசேட படிப்புகள் பல அன்பர்களின் உதவி கொண்டு தக்க முறையில் கொண்டாடப் பெற்றன. இதில் திருவவதாரப் படலப் படிப்புத்தின வைபவத்தை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்று காலை ஆறுமுக சுவாமிக்கு [illegible]த்தர கலசாபிஷேகம் விசேட பூசை சண்முக அர்ச்சனை நடந்தன. நிரையாக நிறுத்தப்பட்ட குத்துவிளக்குகளின் ஒளிப் பிரகாசத்திடையில் வசந்த மண்டபத்தின் முன் அலங்கரிக்கப்பட்ட பீடத்திலிருந்து அடியார்க்கு அருட் தோற்றம் கொடுத்த பெருமானின் கோலத்தை வரைந்து காட்டவும் முடியுமோ? அன்றிச் சொல்லிலமைக்கவும் முடியுமோ?

ஆலயத்திருப்பணி:

கோயிற் சாயப்பூச்சு வேலைகள் நல்லமுறையில் செய்விக்கப்பட்டன. உட்பிரகாரத்தில் சில திருத்தங்களும் செய்யப்பட்டன. வசந்த மண்டபமும், அதன் முற்பக்கமும் அலங்காரமாக விளங்குகின்றன. இப்போது இம்மண்டபத்திலேயே முத்துக்குமார சுவாமி எழுந்தருளி தினம் பூசைகளும் நடந்து வருகின்றன. கோயில் உள்வீதிகள் இருபக்கமும் செங்கற்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மிகச் சுருக்கமான செலவில் இவ்வேலைகளைச் செய்து செய்வித்த அன்பர்கட்கு நன்றி.

—0—


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம் 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

சிறுப்பர்

Std 14


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஸ்ரீ அப்பதீக்ஷிதர்

—:0:—

## எழில் மிகுந்த இல்லற ஞானி

ஸ்ரீ அப்பதீக்ஷிதர் பாரத்வாஜகோத்திரத்திலே திரு. அரெங்கராஜ அத்வரி அவர்களுக்கு அருந்தவப் புதல்வராக கி. பி. 1550 ம் ஆண்டு பிறந்தார். இவருக்கு ஈஸ்வரன் கொடுத்தருளிய வாழ்நாள் 72 வயதென்பர். (கி. பி. 1622) இவரது ஜனனபூமி வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள ஆரணிக்குச் சமீபத்தில்


செ. கோவிந்தசாமி அவர்கள்


அமைந்த அடையபலம் என்ற கிராமமாகும். உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்து தந்தையிடம் கல்வி கற்றுச் சிறந்தார்.

பின் ஆசாரிய தீட்க்ஷிதரான விஜய நகரத்து கிருஷ்ணதேவராயரிடம் ஆஸ்தான வித்துவானாகவும் இருந்து புகழ்பெற்றுவிளங்கினார். சிவபிரானிடம் சிறந்த பக்தி யுடையவர். வடமொழியில் பல நூல்கள் அருளியிருக்கிறார்கள். அத்வைத வேதாந்த நூல்களைச் செய்திருந்தபோதிலும் சிவ தோத்திரங்களையும் மிகுதியாகச் செய்துள்ளார்கள். தமது பரிபூரண காலத்தில் சிதம்பர தலத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது சிதம்பரத்தைப்பற்றி இரு சுலோகங்களும் அருளிச் செய்திருக்கிறார்கள். இரண்டாவது சுலோகம் அருளிய போது சிவபதமுற்றனரென்ப. இவர் ஒரு இல்லற ஞானியாவர். இத்தவசிலரால் இயற்றப்பட்ட நூல்களுள் பாரத தாற்பரிய சங்கிரகமும் ஒன்று வடமொழியிலுள்ளது. இந்நூலை யாழ்ப்பாணத்து வடகோவை ஸ்ரீ சபாபதி நாவலர் தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார்கள். அந்நூல் இப்போது கிடைப்பது அரிது என்பதையறிந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் அதை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

வியாசமுனிவர் தாம் அருளிய மகாபாரதத்தின் தொனிவிருத்தியால் சிவபெருமானது பரத்துவத்தை வெளிப்படுத்தினர். இந்நாலில் கண்ணபிரானது மகிமை கூறப்படுகிறது. கண்ணபிரான் சிவபிரானைப் பூசித்த வரலாறு கூறுமுகத்தானே சிவபிரானது பரத்துவம் வெளியிட்டாரென்க. சிவபிரான் இயல்பாகவே வினையினீங்கி விளங்கும் பரப்பிரமப்பொருள் என வியாசமுனிவர் பாரதத்திற் கூறுகின்றார். உண்மை தெரியாதோர் பரத்துவம் தேறமாட்டாது பிறந்திறந்துழலும் தேவரைப் பரமென்று மயங்குவர். அயன் முதலிய தேவர்களும் பிறந்திறந்து வரும் பசுக்களாவர், இதனைப் "புவனியிற் போய்ப்பிறவாமையில் நாள் நாம்" என்னும் திருவாசகத்தாலும் அறியலாம். பரமபதியாகிய சிவபிரான் ஒருவருக்குப் பிறப்பு இறப்பு இல்லையாகும். இதனால் சிவபிரானே பசுபதி எனவும் முனிவர் தங் கருத்தைப் பாரதத்தில் வெளியிட்டாளினர். கண்ணபிரானும் அருச்சுனனும் திருக்கயிலாயத்தினையடைந்து பிரம தியானமுற்று உய்ந்தனர்.

(வளரும்)






மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 21-9-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.